# அருத்த பஞ்சகம்

1:##
அமலன் அவியாத சுடர்* அளவில்லா ஆரமுதம் *
அமல உருக்குணங்கள்* அணி ஆயுதங்கள் அடியவர்கள் *
அமல அழியாத நகர்* அழிந்தெழுங்காவுடன் எல்லாம் *
கமலை உடன் அரசாளும்* கரிகிரிமேல் காவலனே. (2)

2:
உள்ள பொருளனைத்துக்கும்* உருவ நிலை கருமங்கள் *
தெள்ளிசைவின் வசமாக்கித்* திகழ்ந்து உயிராய் உறைகின்றான் *
நள்ளிருள் தீர்த்த அடியவர்க்கு* நலம் கொடுக்கும் திருவுடனே *
வள்ளல் அருளாளரெனும்* வாரண வெற்பு இறையவனே.

3:
பூதவுடல் புலன்கள் மனம்* புல்லாவி புந்தியெனும் *
யாதும் அலனாய் இலகி* யானெனும் இன் நுண்ணறிவாய்ச் *
சேதனனாய் அடிமையுமாம்* உயிர்க்கெல்லாம் திண்ணுயிராய்த் *
தீதலின்றித் திகழும் சீர்* அத்திகிரித் திருமாலே.

4:
தானடைத்த குணங்கருவி* தங்கிரிசை வழியொழுக்கி *
ஊனெடுத்து உண்டுமிழ்ந்துழலும்* உயிர்க்கெல்லாம் உயிராகிக் *
கானடத்திக் கமலையுடன்* கண்டுகந்து விளையாடும் *
தேனெடுத்த சோலைகள் சூழ்* திருவத்தியூரானே.

5:
உய்யும் உறவு இசையாதே* ஒத்தவர்க்கே அடிமையுமாய்ப் *
பொய்யுருவைத் தமக்கேற்றிப்* புலன் கொண்ட பயனே கொண்டு *
ஐயுறவும் ஆரிருளும்* அல்வழியும் அடைந்தவர்க்கு *
மெய்யருள் செய்திடும் திருமால்* வேழமலை மேயவனே.

6:
விதை முளையின் நியாயத்தால்* அடியில்லா வினையடைவே *
சதையுடல நால்வகைக்கும்* சரணளிப்பான் எனத் திகழ்ந்து *
பதவியறியாது* பழம்பாழில் உழல்கின்றார்க்கும் *
சிதைவில் அருள் தரும் திருமால்* திருவத்தி நகரானே.

7:
எம நியம வாசனங்கள்* இயலாவி புலனடக்கம் *
தமதறியும் தாரணைகள்* தாரையறு நினைவொழுக்கம் *
சமமுடைய சமாதி நலம்* சாதிப்பார்க்கு இலக்காகும் *
அமரர் தொழும் அத்திகிரி* அம்புயத்தாள் ஆரமுதே.

8:
புகலுலகில் இல்லாது* பொன்னருள் கண்டுற்றவர்க்கும் *
அகலகிலா அன்பர்க்கும்* அன்றே தன்னருள் கொடுத்துப் *
பகலதனால் பழங்கங்குல்* விடிவிக்கும் பங்கயத்தாள் *

அருத்த பஞ்சகம்

அகலகில்லேன் என்றுறையும்* அத்திகிரி அருள்முகிலே.

9:
இருவிலங்கு விடுத்து* இருந்த சிறைவிடுத்து ஓர் நாடியினுல் *
கருநிலங்கள் கடக்கும்வழி* காவலரால் கடத்துவித்துப் *
பெருநிலங்கண்டு உயிர் உணர்ந்து* பிரியாமல் அருள்செய்யும் *
உருநலம் கொண்டுறும் திருவோடு* உயர் அத்திகிரியானே.

10 ##
தன் திருமாதுடனே தாம்* தனி அரசாய் உறைகின்ற *
அந்தமில் பேரின்பத்தில்* அடியவரோடு எமைச் சேர்த்து *
முந்தி இழந்தனவெல்லாம்* முகிழ்க்க தந்து ஆட்கொள்ளும் *
அந்தமிலா அருளாழி* அத்திகிரித் திருமாலே.

11 ##
அயன் பணியும் அத்திகிரி* அருளாளர் அடியிணைமேல் *
நயங்கள் செறி கச்சிநகர்* நான்மறையோர் நல்லருளால் *
பயன்கள் இவையனைத்துமெனப்* பண்டுரைத்தார் படியுரைத்த *
வியன் கலைகள் ஈரைந்தும்* வேதியர்கட்கு இனியனவே. (2)

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம: